भारतीय गैर न्यायिक

एक सौ रुपये Rs. 100

रु. 100 ONE HUNDRED RUPEES

सत्यमेव जयते

भारत INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU DM 438909

A. புருஷோத்தமன்

கடலூர்-2 R. Malathi

Date: 23.7.2024

R. MALATHI, STAMP VENDOR
CUDDALORE-2
L. NO. 6166/B1/08-7

2023

-1-

**வாடகை பத்திரம்.**

2024-ம் வருடம் **ஜூலை** மாதம் **24-ம்.** இருபத்து நான்காம் தேதி, புதுச்சேரி மாநிலம், புதுச்சேரி-1, அண்ணா சாலை, கதவு எண்.368, கட்டிடத்தில் முதல் தளத்தில் இயங்கி வரும் **SRI GANESH EDUCATIONAL TRUST (பதிவு எண்.666/2018)**-இதன் சார்பாக, அதன் மேனேஜி டிரஸ்டி **K.சாரங்கபாணி** அவர்களின் குமாரர் **S.செல்வமணி**-மேற்படி **SRI GANESH EDUCATIONAL TRUST-** க்காக எழுதி வாங்கும் வகையில்-**ஏ. பார்ட்டியாகவும்,**

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், கடலூர்-2, திருப்பாப்புலியூர், சன்னதி தெரு, பாடலீஸ்வரர் நகர், கதவு எண்.15, இல்லத்தில் வசிக்கும் R.அய்யாசாமி அவர்களின் குமாரர் **A.புருஷோத்தமன்-1,** மேற்படி

வாடகைக்கு ஏந்துக்கொள்பவர். வாடகைக்கு விடுபவர்.

A.புருஷோத்தமன் அவர்களின் மனைவி **Dr.R.குமுதம்-2 இவர்கள்-பி. பார்ட்டியாகவும்** ஆகிய நாம் இரு பார்ட்டிகளும் சேர்ந்து சம்மதித்து எழுதிக்கொண்ட வாடகை பத்திரம்.

நம்மில் பி.பார்ட்டி கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், கடலூர்-2, திருப்பாப்புலியூர், சங்கர நாயுடு வீதி, கதவு எண்.91, இல்லத்தில் வசித்த **பாடலி.G.தண்டபாணி செட்டியார்** அவர்களின் குமாரர் **D.பாண்டியன் செட்டியார்** அவர்களிடம் **19-12-1983, 22-12-1983, 06-03-1984** ஆகிய தேதிகளில் கிரயம் பெற்று, மேற்படி பத்திரங்களானது கடலூர் 2எண். இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் **1-புத்தகம் 2432/1983, 1-புத்தகம் 2438/1983, 1-புத்தகம் 387/1984** நெம்பர்களாக பதிவாகியுள்ள வகையில் நம்மில் பி.பார்ட்டிக்கு கிரய பாத்தியமும் சொந்தமும் அனுபவமுமான இதில் கண்ட கட்டிடத்தை **M.V.M Kids** என்ற பெயரில் மழலையர் பள்ளி நடத்துவதற்கு வாடகைகக்கு விடும்படி நம்மில் பி. பார்ட்டியை கேட்டுக்கொண்டதன் பேரில் பி. பார்ட்டியும் ஏ. பார்ட்டிக்கு இன்று முதல் 5 ஐந்து வருட கெடுவிற்கு வாடகைக்கு விட ஒப்புக்கொண்டு நமக்குள் **01-08-2024 முதல் 31-03-2025** வரை மாதம் 1 க்கு வாடகை பேசி முடிவு செய்துக் கொண்ட தொகை **ரூபாய்.25,000/- (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டில்) 01-04-2025 முதல் 31-03-2026** வரை மாதம் 1 க்கு வாடகை பேசி முடிவு செய்துக் கொண்ட தொகை **ரூபாய்.30,000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டில்)** அடுத்து வரும் **ஒவ்வொரு வருடத்திற்கும் 5% உயர்த்தி** பிரதி மாதம் 5ம். ஐந்தாம் தேதிக்குள் ஏ. பார்ட்டி பி. பார்ட்டியிடம் வங்கி பணபரிவர்த்தனை மூலம் கொடுத்து தக்க ரசீது பெற்றுக்கொள்ள வேண்டியது.

இதற்கு வாடகை முன்பணமாக இன்று நம்மில் பி.பார்ட்டி ஏ.பார்ட்டியிடம் வங்கி பணபரிவர்த்தனை மூலம் பெற்றுக்கொண்ட தொகை **ரூபாய்.1,00,000-00** இந்த ரூபாய் ஒரு லட்சத்தை நம்மில் ஏ.பார்ட்டி இதில்

வாடகைக்கு ஏந்துக்கொள்பவர். வாடகைக்கு விடுபவர்.

கண்ட கெடு முடிந்து இதில் கண்ட கட்டிடத்தையும் பி.பார்ட்டி வசம் ஒப்புக்கொடுக்கும் சமயம், மேற்படி தொகைக்கு யாதொரு வட்டியுமின்றி பி.பார்ட்டி, ஏ.பார்ட்டி வசம் வங்கி பணபரிவர்த்தனை மூலம் திருப்பி கொடுத்து விட வேண்டியது.

இதில் கண்ட கட்டிடத்தையும் இன்றே நம்மில் பி. பார்ட்டி ஏ.பார்ட்டியின் அனுபவத்திற்கும் சுவாதீனத்திற்கும் உட்படுத்தி ஒப்புக்கொடுத்துவிட்டார். நம்மில் ஏ. பார்ட்டி இன்று முதல் 5 ஐந்து வருட கெடுவிற்கு இதில் கண்ட கட்டிடத்தில் **M.V.M Kids** என்ற பெயரில் மழலையர் பள்ளி வைத்து நடத்தி வந்து, மேற்படி கெடு முடிந்து கட்டிடத்தை ஏ. பார்ட்டி தற்போது எந்த நிலையில் ஒப்புக்கொண்டாரோ அதே நிலையில் பி. பார்ட்டியிடம் ஒப்புக்கொடுக்க வேண்டியது.

இதில் கண்ட கட்டிடத்தையும் நம்மில் ஏ. பார்ட்டி தனது விருப்பம்போல் அரசு அனுமதி அனைத்தும் பெற்றும், மேற்படி பள்ளி நடத்திக் கொள்வதில் பி. பார்ட்டிக்கு யாதொரு ஆட்சேபனையும் கிடையாது என உறுதி அளித்துள்ளார். இதில் கண்ட சொத்தின் சொத்து வரியை பி. பார்ட்டி செலுத்த வேண்டியது. மின் கட்டணத்தை ஏ.பார்ட்டி செலுத்த வேண்டியது.

இதில் கண்ட கட்டிடத்தையும் ஏ. பார்ட்டி காலி செய்வதற்கு முன்பும், பி. பார்ட்டி காலி செய்ய சொல்வதற்கு முன்பும் ஒருவருக்கொருவர் 3 மாதத்திற்கு முன்பு முன் அறிவிப்பு கொடுக்க வேண்டும். இந்தப்படி நாம் இரு பார்ட்டிகளும் சம்மதித்து எழுதிக்கொண்ட வாடகை பத்திரம்.

**சொத்து விபரம்.**

கடலூர் பதிவு மாவட்டம், கடலூர் 2எண். இணை சார்பதிவகம்,

வாடகைக்கு ஏந்துக்கொள்பவர். வாடகைக்கு விடுபவர்.

கடலூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட **திருப்பாப்புலியூர், போடி செட்டி வீதி (எ) திரௌபதி அம்மன் கோயில் வீதியில், கதவு எண்.42A, வார்டு நெ.4, பிளாக் நெ.10, டி.எஸ்.நெ.491/-க்கு 23596 சதுரடி இதில் கீழ்காணும் நான்கு எல்லைக்குள்** கிழக்கு மேற்கில் வடபுறம் 50 அடி தென்புறம் 63 அடி தெற்கு வடக்கில் கீழ்புறம் 116 அடி மேல்புறம் 135 அடி **சதுரடி 6921 இதற்கு ஹெக்.0.0643.0 சதுர மீட்டர்** இந்த அளவுள்ள மனையும் இதில் கட்டியுள்ள கல்கட்டுக்கோப்பு மொட்டைதள மெத்தை கட்டிடம், அதிலுள்ள மின் சர்வீஸ், பிட்டிங்ஸ், டெபாசிட், மின் இணைப்பு எண்கள்.02-006-009-64, 02-006-009-1035 உள்படவும் இதற்கு நான்கு எல்லை. போடி செட்டி வீதி (எ) திரௌபதி அம்மன் கோயில் வீதிக்கு (தெற்கு) சுசீலா, மீனாட்சி, வசந்தி இவர்கள் கட்டிடத்திற்கு (வடக்கு) முத்து வீட்டிற்கு (கிழக்கு) பிரகாஷ் வீட்டிற்கு (மேற்கு)

வாடகைக்கு ஏந்துக்கொள்பவர். வாடகைக்கு விடுபவர்.

Selvam. R. [signature]

சாட்சிகள்.

1. [signature] D. KARTHIKEYAN, 9442282314
19/64, SSR Nagar
CUDDALORE - 2.

2. [signature]
E. JAYAGANAPATHY
593-BHARATHIDASAN ST,
ASHOK NAGAR, LAWSPET,
PONDICHERRY-605008
PH: 7404013027